## IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

O.S.NO. 27/2017

Deposition of Witness : PW–1

Name : ஜானகிராமன்

Father's Name /W/o : த/பெ. முனுசாமி நாயக்கர்

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : காஞ்சிபுரம்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day 14.03.2024

குறுக்கு விசாரணை: ( 4 மற்றும் 5 ம் பிரதிவாதி தரப்பில்)

1. என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சொத்து என்னுடையது என்று தாக்கல் செய்துள்ளேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10 ம் வகுப்பு படித்துள்ளேன். விவசாயம் தான் தொழில் என்றால் ஆம். உயர்நீதிமன்ற வழக்கறிஞர் குமாஸ்தாவாகவும் இருந்தேன். எனக்கு விவசாயம் பற்றியும் சட்டம் பற்றியும் தெரியும் என்றால் ஆம். வழக்கு சொத்தின் சர்வே எண்ணின் மொத்த விஸ்தீரணம் தெரியுமா என்றால் சர்வே எண்.233/8 ல் 78 செண்ட் ஆகும். சொத்தில் ஆதியில் யாருக்கு சொந்தம் என்றால் பூர்வீக சொத்து. இந்த சொத்திற்கு ஆதியில் யார் பெயரில் பட்டா அல்லது சொத்து ஆவணம் இருந்தது என்றால் என் தந்தை முனுசாமி நாயக்கர் பெயரில் இருந்தது. முனுசாமி நாயக்கருக்கு எத்தனை வாரிசு என்றால் 4 மகள்கள் 3 மகன்கள் . நான் ஜானகிராமன், கோவிந்தன் மற்றும் கமலநாதன். மகள்கள் பெயர், சகுந்தலா, வள்ளியம்மாள், கோவிந்தம்மாள் மற்றும் பாஞ்சாலை. இந்த வழக்கு சொத்தை தவிர்த்து வேறு நிறைய சொத்துக்கள் என்

அப்பாவிற்கு இருந்தது என்றால் இருந்தது. பூர்வீகமாக இருந்த சொத்துகள் 50, 60 வருடங்களுக்கு முன்பே போய்விட்டது.

2. என் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எத்தனை என்று எனக்கு தெரியுமா என்றால் 4 ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். பிரமாணவாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரம் 28.06.2001 ல் என் சகோதரர்கள் பாகப்பிரிவினை செய்துக்கொண்டோம் என்றால் ஆம். வழக்கு சொத்து மற்ற சொத்துக்களும் பாகம் பிரித்துக்கொண்டோம் என்றால் என் தம்பி தான் பாகம் பிரித்துக்கொடுத்தார். சொத்து பூர்வீக சொத்தாக உள்ள நிலையில் ஆண் வாரிசுகள் மட்டும் சொத்தை பிரித்துக்கொண்டோம் என்றால் அவர்களுக்கு பணத்தை கொடுத்துவிட்டு என் தம்பி எங்களுக்கு சொத்தை பிரித்துக்கொடுத்தான். பாகப்பிரிவினை செய்துக்கொண்டதற்கு முன்பே 29.05.1986 ல் கூர்சீட்டு மூலம் நாங்கள் சொத்தை பிரித்துக்கொண்டோம் என்றால் ஆம். அதை பதிவு செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணம் அந்த கூர்சீட்டா அதில் உள்ள என்னுடையதா என்றால் ஆம். ஏற்கனவே கூர்சீட்டில் பிரித்த சொத்தை பதிவு செய்யவில்லை என்பதால் மறுபடியும் பாகப்பிரிவினை பத்திரம் பதிவு செய்துக்கொண்டோம் என்றால் இல்லை. தனி பத்திரமாக கொடுத்துவிடுகிறேன் என்று சொல்லி என் தம்பி கிரையம் செய்துக்கொடுத்தார்.

3. 2001 ல் பாகப்பிரிவினை செய்துக்கொண்டபோது அதில் உள்ள விவரங்களை படித்துப்பார்த்து கையெழுத்து போட்டேனா என்றால் ஆம். பாகப்பிரிவினையில் அ.அட்டவனை சொத்து எனக்கு கொடுக்கப்பட்டதா என்றால் ஆம். எனக்கு அ.அட்டவனை, கோவிந்தனுக்கு பி.அட்டவனை, கமலநாதனுக்கு சி.அட்டவனை சொத்தும் கொடுக்கப்பட்டது. கமலநாதன் தான் பாகப்பிரிவினை செய்துக்கொடுத்தார். நான் மருத்துவமனையில் இருந்தேன் என்னை தூக்கிக்கொண்டு வந்தார்கள். அ,பி,சி அட்டவனை சொத்துக்களில் என்ன

சொத்துகள் யாருக்கு போனது என்று எனக்கு தெரியும் என்றால் தெரியும். எனக்கு வந்த சொத்தில் சர்வே எண்.234/7 ல் 5 செண்ட் நிலமும் கிணற்றில் 1/3 பாகமும் கமலநாதனுக்கு 31.10.2001 ல் கிரையம் செய்துக்கொடுத்தேனா என்றால் ஆம். இந்த கிரைய பத்திரத்தில் பாகப்பிரிவினை மூலம் வந்த சொத்தை கிரையம் செய்துக்கொடுப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆம்.

4. கோவிந்தனுக்கு வந்த பி.அட்டவனை சொத்தை கமலநாதனுக்கு விற்பனை செய்தார் என்றால் அவர்கள் பரிமாற்றம் செய்துக்கொண்டார்கள் எனக்கு தெரியாது. நானும், கோவிந்தனும் சர்வே 234/7 ல் விற்ற சொத்தை கமலநாதன் 1ம் பிரதிவாதி அரவிந்தனுக்கு 2006 ல் கிரையம் கொடுத்தார் என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க மேலும் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)